ஆனால் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்காத சூழ்நிலை இருந்தால் கட்டாயம் அது தண்டிக்கப்பட வேண்டியதுதான். உரியவர்களின் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, அதுபற்றிய குறிப்புக்களைக் கொடுத்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலைகள் அமைக்கும் திட்டம்.

318—(*வினா எண். 21498) திரு இ. கணேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் நவீன அரிசி ஆலைகள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. இ. கணேசன்: தலைவர் அவர்களே, எதிர்காலத்திலேயாவது நவீன அரிசி ஆலைகளைச் சேலம் மாவட்டத்தில் அரசு அமைக்க முன்வருமா? நவீன அரிசி ஆலை அமைப்பதற்கான அடிப்படைத் தேவைகள் யாவை? என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொள்முதலுக்கே நெல் தருவதில்லை. அங்கே நெல்லே இல்லை. பிற மாநிலங்களிலிருந்து தான் அங்கே நெல்லை அனுப்ப வேண்டி இருக்கிறது. எனவே, பிற மாவட்டங்களில் நவீன அரிசி ஆலைகள் அமைக்கப்படுவதால் அதேபோன்று சேலத்திற்கும் வேண்டும் என்று கேட்பது நியாயம் இல்லை. ஆகவே எங்கெல்லாம் அதிகமாக நெல்லைக் கொள்முதல் செய்து அவற்றை உடனடியாக ஆங்காங்கே அரைக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் அரிசி ஆலைகளை ஏற்படுத்துகிறோம். அந்த அடிப்படையிலே 13 ஆலைகள் இருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்திலே ஏராளமாகக் கொள்முதல் செய்து பிற பகுதிகளுக்கு அனுப்பி ஆங்காங்கே இருக்கின்ற அரவை ஆலைகளைப் பயன்படுத்துகிறோம். மேலும் இங்கே ஏற்கெனவே நான் எடுத்துக் குறிப்பிட்டதுபோல் 100 டன் அரவைத் திறன் கொண்ட ஒரு பெரிய நவீன அரிசி ஆலையை 2 கோடி மதிப்பீட்டில் சீர்காழிக்குப் பக்கத்திலே துவங்குவதற்கான தன்மைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கே இடத் தகராறு இருக்கின்றது. அது ஓரளவுக்குத் தீர்ந்துவிட்டது. விரையில் அதற்கான பெருமுயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1984 மார்ச் 15]

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மத்திய அரசின் கொள்கை காரணமாக தனியார்கள் கூட நவீன அரிசி ஆலைகள் அமைக்கவேண்டும என்று ஒரு சட்டத்தை இயற்றி, இதில் மாநில அரசு தீவீரம் காட்டுகின்றது. ஆகவே தனியார்களும் நவீன அரிசி ஆலைகளை அமைத்து, அரசாங்கமும் நவீன அரிசி ஆலைகளை அமைத்து, அவ்வாறு அமைப்பதன் காரணமாக ஆலைகளைப் பொறுத்த வரையில் போதுமான அளவிற்கு நெல் கொள்முதல் காண முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை பற்றி அரசு பரிசீலனை செய்யுமா? ஆகவே அரசு அமைக்கக்கூடிய ஆலைகளை நிறுத்தி வைக்கவும் தனியார்கள் ஆலைகளை அமைக்கவும் அரசு ஏதாவது சலுகை காட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரிய நவீன அரிசி ஆலைகளை அமைக்கவேண்டும் என்றால் மத்திய அரசினுடைய முழு அனுமதியும் வேண்டும். தேவை, மற்றவைகளைக் கருதி, நிலைமைகளை எல்லாம் கண்டறிந்து, அனுமதி அளிப்பதா, வேண்டாமா என்ற முடிவுக்கு வருவார்கள். ஆனால் சிறிய ஆலைகள் அமைப்பதைப் பொறுத்தவரையில் அதற்குத் தேவையான உரிமம் வழங்குகின்ற பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கின்றது. ஆங்காங்கே இருக்கின்ற நிலைமைகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதியின் தன்மை, அங்கே அரவை ஆகின்ற நெல்லின் அளவு, விற்பனை ஆகின்ற அரிசி ஆகிய அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டுதான் செய்யப்படுகின்றது. அதாவது 7500 டன் ஒரு ஆண்டுக்கு மிஞ்சுகின்ற சூழ்நிலை இருந்தால் அங்கே ஒரு புதிய ஆலையை அமைப்பதற்குரிய உரிமம் வழங்கப்படுகின்றது. ஆனால் ஏற்கனவே இருக்கின்ற ஆலைகளில் அரைப்பதற்கான நெல் போதிய அளவில் அந்தப் பகுதியில் இருந்து கிடைக்காமல் பற்றாக்குறை இருந்தால் அந்தப் பகுதிகளில் புதிய ஆலைகள் அமைக்க அனுமதி கிடைப்பதில்லை. ஆகவே, சிறிய ஆலைகளைப் பொறுத்தவரையில் அனுமதி வழங்குகின்ற பொறுப்பை நாம ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பெரிய நவீன ஆலைகளை அமைக்க வேண்டும் என்றால் அவற்றுக்கான அனுமதியை மத்திய அரசு தான் தரவேண்டும.

திரு. மு. அப்பாதுரை : தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்தில் அதிகமான வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட காலகட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்கள் எல்லாம் தனியார் கிடங்குகளிலேயே கிடக்கின்றன. நான் கூட சமீபத்திலே அம்பாசமுத்திரத்திற்குச் சென்று பார்த்ததில் அந்த நெல் எல்லாம் புழுங்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கின்றது. ஆகவே, உடனடியாக அந்த நெல்லை எல்லாம் அரவை செய்து அரிசியாக ஆக்குவதற்கு உரிய நடவடிக்கை அரசுத் துறையில் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.